2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) திருச்செந்தூர் இடைத்தேர்தல் தேதி மாற்றம்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய தமிழ்நாட்டில் நடைபெற இருக்கின்ற திருச்செந்தூர் இடைத்தேர்தல் ஏற்கனவே இந்த மாதம் 27 ஆம் தேதி தேர்தல் என்று அறிவித்து இருந்தது. ஆனால் இன்றைக்கு காலையிலே பத்திரிகையிலே எல்லாம் மார்ச் 1 ஆம் தேதி என்று வந்திருக்கிறது. அது குறித்து சர்க்காருக்கு அதிகார பூர்வமான அறிவிப்பு தேர்தல் கமிஷனிடமிருந்து வந்திருக்கிறதா என்பதை நம்முடைய அவை முன்னவர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். ஏன் என்றால், இப்போது தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமென்று சொல்லி, அங்கே திருவிழா என்று சொல்லி, எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வை. கோபாலசாமி அவர்கள் தேர்தல் கமிஷனுக்கு ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு இன்றைக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. 3 நாளைக்கு முன்னாலே, தேர்தலை இன்னும் கொஞ்ச நாள் தள்ளி வைக்க வேண்டுமென்று அங்கேயிருக்கிற ஒரு நண்பர் எழுதியிருக்கிறார். காரணம் ஏற்கனவே முன்பெல்லாம் எலக்ட்ரிசிடியே 4 மணி நேரம்தான் இருக்கும். இப்போது 20 மணி நேரம் கரன்ட் வருகிறது. அதனாலே கிடைக்கிற இந்த சௌகரியம் தேர்தல் முடிந்துவிட்டால் இல்லாமல் போய்விடுமே, ஆகையினாலே தேர்தலை ஒத்திவைத்தால் நாங்கள் கரண்ட் கட் இல்லாமல் இருப்போமே என்று அந்த நண்பர் எழுதி இருக்கிறார்கள். ஆகவே அப்படி ஏதாவது சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா, அதைப்பற்றி அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா என்பதை நம்முடைய முன்னவர் அவர்கள் தெரிவிக்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதே, இங்கே அவையிலே நடைபெறுகின்ற சட்ட விதிகளில் ஒழுங்கீனமோ, அல்லது குறைபாடோ ஏற்பட்டால் அதை சுட்டிக்காட்டுவதற்குத்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் எழுப்பி இருப்பதற்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. ஆனால் வேறு ஏதேனும் முறையிலே அந்த விளக்கத்தை பெறுவதற்கு கொண்டு வந்திருக்கவேண்டும். ஆனாலும் பிரச்னையைக் கொண்டு வந்துவிட்டதன் காரணமாக, மாண்புமிகு தலைவர் அவர்களும் அதற்கு இடம் கொடுத்து விட்டதன் காரணமாக, இனிமேல் இதை முன் உதாரணமாகக் கொண்டு இப்படிப்பட்ட வினாக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பாமல் இருந்தால் நல்லது. ஆகவே, இந்த திருச்செந்தூர் தேர்தல் இந்த மாதம் 27 ஆம் தேதி வைத்துக்கொள்ளலாம் என்று தேர்தல் கமிஷன் ஒரு அறிவிப்பு கொடுத்தது. அதை

மாநில அரசும் ஏற்றுக்கொண்டது. இங்கே அதற்குப் பிறகு, 27 ஆம் தேதி திருவிழா நடைபெறுகிறது என்று ஒரு குறிப்பு தரப்பட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களும் என்னிடத்திலே தெரிவித்தார்கள். அதற்குப்பிறகு நாங்கள் விசாரித்த பிறகு 27 ம் தேதி இரவு தெப்ப உற்சவம் நடைபெறுகிறது என்றும், பகலிலே ஒன்றும் இல்லை என்றும் ஒரு குறிப்பு மட்டும் வந்தது. அதற்குப் பிறகு அங்கே இருக்கிற அரசியல் கட்சி உறுப்பினர்களும் மற்றவர்களும் 21 ஆம் தேதியிலே இருந்து தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெறுவதன் காரணமாகவும், மக்கள் பல்வேறு பகுதியிலே இருந்து 23, 24 ஆம் தேதிகளில் ஏராளமாக வருவதன் காரணமாககூட்டங்கள் கூடும் என்றும், தேர்தலிலே ஈடுபடுகின்ற கட்சிக்காரர்கள் எல்லாம் இறுதிக் கட்டத் தேர்தலிலே ஈடுபடுகின்றது அந்த 23, 24 ஆம் தேதிதான் என்றும் 25 ஆம் தேதி 5 மணியோடு தேர்தல் முடிந்துவிடுகிறது, 26 ஆம் தேதி ஓய்வு விடப்படுகிறது. ஆகவே இதைத் தள்ளி வைக்கப்படுவது நல்லது என்ற கருத்தை அரசியல் கட்சித் தலைவர்களும் தெரிவித்து இருக்கிறார்கள். இங்கே இருப்பவர்கள் தெரிவித்ததற்கு இணங்க தேர்தல் கமிஷனுக்கு இந்த கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆகவே, தேர்தல் கமிஷனுக்கு நாம் தெரிவித்தபோதும், கொஞ்சம் அவகாசம் கொடுத்து, மார்ச் 3 ஆம் தேதி வைத்துக் கொள்ளலாம் என்றுதான் நாம் குறிப்பிட்டு இருந்தோம். ஆனால் தேர்தல் கமிஷன் கேரளாவிலே 1 ஆம தேதி அன்று என்று மாற்றி வைப்பதன் காரணமாக, தமிழகத்திலேயும் 1 ஆம் தேதி மாற்றி வைப்பது நல்லது என்ற குறிப்பு அரசுக்கு தெரிவித்ததன் காரணமாக மார்ச் 1 ஆம் தேதி மாற்றி வைத்திருக்கிறோம். அது எல்லோருக்கும் சௌகரியமா இருக்கும் என்ற அடிப்படையில்தான் வைக்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரிமைப் பிரச்னை சம்பந்தமாக ஒரு நோட்டிஸ் கொடுத்து இருந்தேன் 3 ஆம் தேதி மாண்புமிகு முதல்வரவர்கள் இங்கே சொன்ன சில பேச்சுவள் பேக்ட்ஸ் சம்பந்தமாக சில விஷயங்களை சொன்னது தவறு என்ற வகையிலே சொல்லக்கூடாது என்ற வகையிலே வழக்கறிஞர்கள் சிலர் அறிக்கை விட்டிருக்கிறார்கள், அது சட்டசபையினுடைய உரிமையை மீறியது. சட்டமன்ற உறுப்பினர்கள் செய்யக்கூடிய கடமையிலிருந்து அது தடுக்கிறது என்று வகையிலே நான் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடு). (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த உரிமைப் பிரச்னை என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு).